திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறேன், நான் சொல்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்துப் பேசுவதற்கு என்னிடத்தில் எழுதிக்கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் பேசிய பிறகு தானே உங்களுக்கு வாய்ப்பு தர முடியும்? மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் விதி 55-ன்கீழ் பேசுவதற்கு எழுதிக்கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்று சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்து, அது தற்போது மேதகு Governor இடம்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டத்திற்குட்பட்டு Justice Authinathan Commission, நீதியரசர் அவர்களின் தலைமையில் கமிஷன் அமைக்கப்பட்டு, அதில் 6 நபர்களை நியமித்து, அதுதான் மேதகு ஆளுநர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதே தவிர, அதை குற்றம் என்று சொல்வதற்கோ அல்லது ** என்று வருவதாக இருந்தால் அதை அரசு பார்த்துக்கொள்ளும். அதனை நான் பதிவு செய்துவிட்டேன். போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு).

(உ) ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் அணிவகுப்பு நடத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்களும் அறிவித்துள்ள நல்ல அறிவிப்புகளை செவிலியர்களின் காதுகளில் தேன் வந்து பாய்கின்ற அறிவிப்புகளான அவர்களின் சம வேலைக்கு சம ஊதியம், பணி நிரந்தரம் ஆகிய இந்த அறிவிப்புகளை வரவேற்று. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், எது குறித்து?*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி கூறுகிறேன், நன்றி கூறிவிட்டு சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், எது குறித்துப் பேசுகிறீர்கள்?*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்கிறேன். செவிலியர்கள் குறித்துப் பேசுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிக அளவில் கவன ஈர்ப்புத் தீர்மானம் அளித்திருக்கிறீர்கள். தற்போது ஒன்று குறித்து* raise *செய்கிறீர்களே, அது எது என்று கேட்கிறேன். நேற்று நீங்கள் போராடச் சென்றீர்களே, அது குறித்துப் பேசப்போகிறீர்களா?*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எது குறித்துப் பேச அனுமதி அளித்தாலும் அது குறித்துப் பேசுகிறேன். ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எது குறித்துப் பேசினாலும் ஒரு நிமிடத்தில் உரையாற்றி முடிக்க வேண்டும்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், மாண்புமிகு தளபதி அண்ணன் அவர்களின் ஆட்சியில் தமிழ்நாடு அமைதியாகவும், சமூகநீதிக்காகவும் களத்தில் நின்று போராடுகின்ற அனைத்து மக்களையும் சகோதரத்துவத்துடனும், சமத்துவத்துடனும் பார்க்கின்ற இந்தச் சூழலில்* RSS *என்கிற ஒரு அமைப்பு. . .*

பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம், ஒரேயொரு நிமிடம் உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புத்*

[பேரவைத் தலைவர்] [*2023 அக்டோபர் 11*

தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசும்போது, ** அவர்கள் பதிவு செய்தார்கள். அவர்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நம்முடைய பத்திரிகையாளர்கள், ஊடக நண்பர்கள் உட்பட அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த அவை, இந்த நாட்டில் அமைதியை உருவாக்குகின்ற அவை, மக்களுக்கான அவை, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டத்தின் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார். ஆகவே, தயவுசெய்து அந்தக் குறிப்புகளை யாரும் வெளியிடக்கூடாது. நான் உட்பட, திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அமைப்பு வருகின்ற நாடாளுமன்ற தேர்தலைக் கருத்தில் வைத்து, தமிழ்நாடு முழுவதும் 100-க்கும் மேற்பட்ட இடங்களில் காக்கிச் சீருடை அணிந்து, கையில் ஆயுதங்களை ஏந்தி தமிழ்நாட்டில் சீருடை அணிவகுப்பு நடத்தப்போகிறோம் என்று நம்முடைய அரசுக்கும் இங்கிருக்கின்ற மதச்சார்பின்மையையும் கேள்விக்குறியாக்குகின்ற நிலையில் பேரணிகளை ஒழுங்கு செய்வதாகச் சொல்லி காவல் நிலையங்களை அணுகி அனுமதி கேட்டுக்கொண்டிருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும்; இது காந்திய தேசம்; காந்தியை கொன்றவர்களுக்கு இங்கு அனுமதி இல்லை என்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டும். நாங்கள் சமூக நீதிக்கான ஓர் அமைதிப் பேரணியை நடத்துவதற்கும், காவல் துறையை நாங்கள் அணுகுகின்றபோது, எங்களுக்கு 'அனுமதி இல்லை' என்கிறார்கள். கொடியேற்றுவதற்கு அனுமதியில்லை, கூட்டம் போடுவதற்கு அனுமதியில்லை, மக்கள் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு அனுமதியில்லை என்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஜனநாயகப் போராட்டங்களையே மறுத்து சட்ட-ஒழுங்கைக் காப்பாற்ற நினைக்கின்ற தங்கள் ஆட்சியில், இந்த RSS மதத்தின் பெயரால் மனிதத்தை கூறுபோடுகின்ற இந்தக் கும்பல்களுக்கு தமிழ்நாட்டில் எங்கேயும் பேரணி நடத்தவதற்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2023 அக்டோபர் 11] [திரு. தி. வேல்முருகன்]
நீங்கள் அனுமதி அளிக்கக் கூடாது. (மணியடிக்கப்பெற்றது) அப்படி அவர்களுக்கு கொடுத்தால் சமூக நீதியை நிலைநாட்டுகின்ற எங்களைப் போன்ற இயக்கங்களுக்கும். . .

7. இஸ்ரேல் போர், தமிழகத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுத்த முதலமைச்சருக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள்தான் நன்றாக பேசிவிட்டீர்களே! நானும் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்ரேல் நாட்டிலே நடக்கிற பிரச்சினைகளை எல்லோரும் அறிவோம். ஒரு போர் சூழல். தமிழகத்தைச் சேர்ந்த 7 பேர் அங்கிருந்து என்னை தொலைபேசியிலே தொடர்பு கொண்டார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திலேயே அந்தக் குறிப்புகளை கொடுத்தேன். அந்த 7 பேரைச் சேர்த்து, மொத்தமாக தமிழகத்தைச் சார்ந்தோர் எத்தனையோ பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக எடுத்திருக்கிறார். அந்தவகையிலே நான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

8. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 106 முதல் 155 வரையிலான 50 அறிக்கைகளை பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.